★ கொழும்புப் பத்திரிகைகள் கண்டனம்

# படையினரின் முன்னெச்சரிக்கையின்மையே ஆனையிறவு முகாம் முற்றுகைக்குக் காரணம்

ஆனையிறவு இராணுவ முகாம் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் தமது கண்டனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளன. ''ஆனையிறவு முகாம் விடுதலைப்புலிகளால் முற்றுகையிடப்படவுள்ளது என படையினருடன் இருந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் எச்சரித்திருந்தன. எனினும் இதை இராணுவம் கவனியாது விட்டு முற்றுகையை முறியடிப்பது குறித்து எவ்வித முன்னெச்சரிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளது.'' எனத் தனது கண்டனத்தை 'ஐலன்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. புலிகளின் முற்றுகையை நம்பமுடியாது இருக்கிறது என இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் இது எப்படி நடந்தது என்பதை ஆராய அதிகாரிகள் தவறுகின்றனர் என ஐலன்ட் மேலும் தெரிவித்துள்ளது. ''ஆனையிறவை முற்றுகையிட்டுத் தாக்குமாறு புலிகள் தலைவர் பிரபாகரன் திடீரென உத்தரவிடவில்லை. இது திடீரென நடைபெற்ற முற்றுகையுமல்ல —04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 236 பிரசோற்பத்தி ஆடி 06 (22 - 07 - 1991) திங்கள்

# முன்னேறி வந்த இராணுவ அணி புலிகளினால் இரண்டாகியது

## பிரிவடைந்த ஓர் இராணுவ அணியை புலிகள் முற்றாகச் சுற்றிவளைத்தனர்

**கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து படையினரின்பெரும் அணியொன்று ஆனையிறவை நோக்கி முன்னேறியது. இப்படையணியைச் சுமார் ஒரு மைல் தூரத்தில் வைத்து விடுதலைப்புலிகள் ஊடறுத்து இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். முன்னே சென்ற அணியை புலிகள் முற்றாகச் சுற்றி வளைத்துத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.**

நேற்றுமாலை 5.15 மணியளவில் படையினர் விமானத் தாக்குதலின் உதவியுடன் மருதங்கேணி சந்தியூடாகக் கட்டைக்காட்டிலிருந்து இரண்டரை மைல் தொலைவிலுள்ள புல்லாவெளிப் பகுதிக்கு முன்னேறி வந்தனர்.

படையினர் இவ்வாறுபுல்லாவெளிப்பகுதியை வந்தடைய விடுதலைப் புலிகளின் அணியொன்று அங்கிருந்து படையணிகளுக்குப் பக்கவாட்டில் ஒன்றரைமையில் தூரம் வரை பின்னால் சென்று முன்னேறி வந்த படையினரைஊடறுத்து இடையில் புகுந்து கொண்டனர்.

இதனால் இராணுவ அணி முன்னால் ஒரு குழுவாகவும் — 04 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதலில் பாடசாலை சேதம்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு - வெற்றிலைக் கேணிப்பகுதியில் கரையிறங்கிய படையினர் தங்கியிருந்த வெற்றிலைக்கேணி பரமேஸ்வர மகாவித்தியாலயம் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் ஆனையிறவிலும் மோதல்கள் நடைபெறுவதால் விமானப்படையினர் இரு பகுதிகளுக்கும் மாறி மாறிப் பறந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 43, 18, 50

## கட்டைக்காடு மோதலில் படையினரின் 3 சடலங்கள் மீட்பு

நேற்றுமுன்தினம் கட்டைக்காட்டுப்பகுதியில் இருந்து வெளியேற முயன்றவேளை விடுதலைப்புலிகளின் தாக்குதலால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களிடமிருந்து ஜி. பி. எம் ஜி. —04ஆம் பக்கம் பார்க்க

## வாகனங்களை ஏற்றும் 'படகு'

நேற்று இரவு கட்டைக்காடு, ஆழியவளைப் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

பல தடவைகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலுக்கு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகத்தெரியவரவில்லை இதே வேளை இக்கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் நடமாட்டம் மேலும் அதிகரித்து வருகிறது.

நேற்று நண்பகல் இப்பகுதியிலிருந்து இராணுவ வாகனங்கள் மற்றும் ஆயுதங்கள் ஏற்றிச் செல்லக் கூடிய —04ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு மோதலில் 15 படையினர் பலி

மணலாறு மாவட்டத்தில் வெளியேறிவந்த படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் யுத்தம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை பொம்மர்கள், ஹெலிகள், அவ்ரோ என்பன தாக்குதல் நடாத்த படையினர் முன்னேறிவந்தனர். 300 பேர் கொண்ட ராணுவப் படையணியை புலிகள் வழிமடக்கித்தாக்குதலை ஆரம்பித்தனர்.

மோதல்கள் காலைமுதல் மாலைவரை நடைபெற்றன. மோதல்கள் நடைபெற்ற வேளை நித்திகைக்குளம் நோக்கி முகாமிலிருந்து இடையிடையே ஷெல் தாக்குதலையும் படையினர் நடாத்தினர்.

இம்மோதலின் போது 15 படையினர் பலியாகினர். பல —04 ஆம் பக்கம் பார்க்க

### இரு நாள் மந்த நிலைக்கு அரசின் காரணம்

## பலப்படுத்தவே தாக்குதல் நிறுத்தம்

கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறக்கப்பட்ட படையினர் சென்ற இரு தினங்களாக தமதுமுன்னேறும்முயற்சியைக் கைவிட்டது குறித்து பாதுகாப்பு அமைச்சு விளக்கம் அளித்துள்ளது.

தரையிறக்கப்பட்ட படையினருக்கான உணவு, மற்றும் ஆயுதங்கள் கையிருப்பைப் பலப்படுத்துவதற்காகவே படையினர் இரு தினங்கள் தமது நடவடிக்கையைத் தளர்த்தியிருந்தனராம்.

## இரு சிரேஷ்ட அதிகாரிகள் 'பலவேகய'வுக்கு தலைமை!

ஆனையிறவை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பரேஷன் பலவேகய இராணுவ நடவடிக்கைக்கு இரு இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் தலைமைதாங்குகின்றனர்.

வடபகுதிக்கான இராணுவ இணைப்பதிகாரி மேஜர்ஜெனரல் கொப்பேகடுவவும் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் விஜேவிமலரட்னவுமே நடவடிக்கையில் ஈடுபடும் 5 —04ஆம் பக்கம் பார்க்க

## கரையோரக் கிராமங்கள் படையினரால் அழிப்பு

இராணுவத்தினர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கட்டைக்காட்டிலிருந்து வெற்றிலைக்கேணி வரை உள்ள கரையோர மீனவக் கிராமங்களை திட்டமிட்டு அழித்து வருகின்றனர்.

அப்பகுதியில் நிலைகொண்ட இராணுவத்தினர்உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆழியவளைப் பகுதிகளை முழுமூச்சாகக் குண்டு வீசி அழித்து வருகின்றனர்.

இடம் பெயர்ந்த இப்பகுதி மக்கள் மீண்டும் குடியேற — 04 ஆம் பக்கம் பார்க்க

## பிரிந்த குடும்பத்தை தேடி அலையும் அவலம்

வெற்றிலைச் கேணிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடற்தொழிலுக்குச் சென்றிருந்த வேளை அப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து சென்ற தமதுகுடும்பங்களைத் தேடி குடும்பத் தலைவர்கள் தினமும் அலைந்து வருகின்றனர்.

கடந்த பத்து நாள்களாக —04ஆம் பக்கம் பார்க்க

## கட்டைக்காட்டுப் பகுதியில் 12 பேரைக் காணவில்லை

கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதியில் இடம்பெற்றஇராணுவ நடவடிக்கையின் போது மேலும் 12 பேர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு காணாமற் போனவர்கள் எனக் கருதப் படுபவர்கள் படையினரிடம் அகப்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது. இவர்களின் விவரம் வருமாறு:

வெற்றிலைக் கேணியைச் —04ஆம் பக்கம் பார்க்க

## பயிற்சி ஆசிரியை காரைநகரில் விடுதலை

காரைநகரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது காரைநகரில் சிக்கிக் கொண்ட பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதி யாண்டுப் பயிற்சி ஆசிரியை செல்வி ஆறுமுகம் பரமலக்சுமி கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியை காரைநகரிலிருந்து நயினாதீவு ஊடாக நேற்று முன்தினம் யாழ் வந்து சேர்ந்துள்ளார். 33

## பரந்தனிலும் குண்டுவீச்சு

பரந்தன் குமரபுரம் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் கொடூரமான முறையில் குண்டுகளை வீசியதாக அங்கிருந்து வருவோர் தெரிவி — 04 ஆம் பக்கம் பார்க்க

# ஆண்டு இரண்டிலும் ஆறாத அலைகள்!



## வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஈசன்)
## லெப்டினன் ஆஷா

தாயகத்திற்காக
உதித்தநாள்:
11 - 01 - 1969

தமிழீழத்திற்காக
உதிர்ந்தநாள்:
22 - 07 - 1989

ஆளப்பிறந்தவர் தமிழர் என்றாயோ
ஆண்டவரலாற்றை நீ புகன்றாயோ
தோளில் தமிழர்க்கு பழவீரம் திரும்ப
துளிர்க்கச் செய்தாயோ - இயக்கச் சென்றாயோ.

விட்டில் பூச்சியாய் நீ விளக்கொளியில் விழவில்லை
சிலைவைக்க வேணுமென்று நீ சிந்தையிலே நினைக்கவில்லை
தலைவன் பணியில்தான் நடக்கவேணுமென்று
தாயகம் மீட்பதில் தாகம் எடுத்தவனே.

தாயகத்தின் விடுதலைக்காய் தரணியிலே வந்துதித்தாய்
சோதனை வேளையிலும் சாதனைகள் செய்து நின்றாய்
மாவீரர் குடும்பம் என்ற மறவர் குலப் பெயர்தந்தாய்
ஆஷா நீ இறக்கவில்லை இன்று ஆயிரமாய் வளர்கின்றாய்.

மானப்போர் தொடுக்கின்ற மறவர் பூமியிலே
உண்மை ஒரு நாளும் உறங்காது தம்பி!
சத்தியம் என்றுமே சாகாது - ஆஷா - உன்
இலட்சியம் ஓர் நாள் நிறைவேறும் ஈசா!

ஆஷா குடும்பத்தினர்.

''தாயகம்''
''சமுத்திரதாரா''
சரசாலை.

07088

## பெரியபயன் தரும் சிறிய இலை

கறிவேப்பிலை பயன்மிக்கதாகும். கறிவேப்பிலைத் துவையல் குடல் நோயுள்ளவர்களுக்குப் பெரும் பயன் அளிக்கவல்லது. இது குடலுக்கு வலுவூட்டும். பத்தியச் சமையலில் கறிவேப்பிலைத்துவையலுக்குத் தனியிடமுண்டு. உணவுக்கு மணமூட்டச் சேர்க்கப்படும் கறிவேப்பிலை இலைகளை உணவுக்கு மணமூட்டிய பின் நீக்கிவிட வேண்டியதில்லை. அதனையும் சேர்த்து உண்பதே சிறந்தது. இதனால் ஜீரண உறுப்புக்களில் உண்டாகும் குறைகளை இவ் இலை நீக்கி விடுகிறது. நல்ல பசி, சுவை, ஜீரணசக்தி ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. இயற்கை வழங்கும் மூலிகைச் செல்வங்களில் கறிவேப்பிலை முன்னணியில் திகழ்கிறது.

## கூட்டுறவுச் சங்க ஊழியர்க்கு 300 ரூபா சம்பள அதிகரிப்பு

சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் கடமை புரியும் நிரந்தர, தற்காலிக, அமைய, நாளாந்த சம்பளம் பெறும் அனைத்து ஊழியர்க்கும் 1991-05-01 திகதி தொடக்கம் மாதாந்த சம்பளத்தை 300 ரூபாவால் அதிகரிக்க அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து யாழ் மாவட்டக் கூட்டுறவு சபை சம்பள அதிகரிப்பை சகல ஊழியர்க்கும் வழங்குமாறு அறிவித்துள்ளது.

இச் சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்று நிருபத்தை சகல கூட்டுறவுச்சங்கத் தலைவர்கட்கும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது. (74)

## வருடாந்தத் திருவிழா

குடத்தனை பொற்பதிப் புனித இராயப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் முதல் திகதியில் திருச் சுரூப சுற்றுப்பவனி இடம்பெறும். அன்றிரவு ''மரிய சிலியான்'' என்னும் நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (15)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

இன்றைய நாட்டு நிலைமையை மனதில் கொண்டும் பல அதிபர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இலங்கை சைவ சமய பாடப் பரீட்சை 1991இன் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 31 7.91 வரை நீடிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளோட்ட விழா

வண். வட மேற்கு ஆனைக்கோட்டை அருள் மிகு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய புதிய சித்திர மணித் தேர் வெள்ளோட்ட விழா அடுத்த மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு நடைபெறும்.

## அறுவடை விழா

நல்லூர் ப. நோ. கூ. சங்கம் உள்ளூர் உணவுப் பயிர் உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாகவும், அதன் அவசியத்தை வலியுறுத்தும் முகமாகவும் சங்க விவசாய நிலத்தில் உற்பத்தி செய்யப் பெற்றதின் அறுவடையை இம் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்க உள்ளது.


## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

வேப்பெண்ணை நெற்பயிரை நோய், பீடை பூச்சிகளிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. போத்தல் ரூபா 90/-. அரைப் போத்தல் ரூபா 45/-. மில்க்வைற் யாழ்ப்பாணம். 07085


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09
—
04
—
1956



அழிப்பு
22
—
07
—
1984

### து. பஞ்சலிங்கம் (மனோமாஸ்டர்)

நீ தமிழின விடிவிற்காய் வறுமையின்
மடியில் தவழ்ந்த அந்த நாட்கள் .........
கண் விழித்த இரவுகள்.........
தமிழீழ சந்து பொந்துகளிலெல்லாம் ஒலித்த
உன் போர்க்குரல்.........
தமிழீழ மண் எங்குமுள்ள உன் காலடிச் சுவடுகள்...
தமிழின விஷவேர்களிடம் வினா எழுப்பத்தான்
போகின்றது.

கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர், நண்பர்கள்,
உறவினர்கள்.

07093

# உணவுப் பழக்கத்தை மாற்றி உற்பத்தி பெருக உழைப்போம்

பி. ஜி. 11. 11, எனப்படும் நெல் இனம் அதிக விளைச்சலைக் குறுகிய காலத்தில் கொடுப்பதால், எமது விவசாயிகளில் பலர் இவ் இனத்தையே அதிகம் விதைக்கின்றனர். உணவில் தன்னிறைவு காணவேண்டிய இக்காலகட்டத்தில் எமது உணவுப் பழக்கத்தில் வெள்ளை நிற அரிசியாக இவ் இனத்தையே அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது சமிபாட்டில் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாது. மற்ற அரிசி இனத்திலும் பார்க்க குறைந்த நேரத்தில் இதனை சமைக்கலாம். நாம் உண்டு பழகிய சிவப்பு நிற அரிசியில் உள்ள புரதச்சத்தையும் விட புரதச்சத்து நிறைந்த இவ் இனம் மிகவும் ஊட்டச்சத்து நிறைந்ததாகும்.

மீன், இறால், நண்டு, கணவாய், மட்டி போன்ற புரதம் நிறைந்த உணவு வகைகளும் எமது பிரதான வளங்களான கடலில் இருந்தும் குளங்களில் இருந்தும் எமது தேவைக்கு மேலாகப் பெறப்படுகின்றன. சந்தைப்படுத்தும் அமைப்பு முறையையும், போக்குவரத்து வசதிகளையும், பதனிடலையும்சீராக்கும்போதுதேவைக்கு அதிகமான உற்பத்தி பயன் தருவதாக அமைகின்றது. அத்துடன் புரதம் நிறைந்த உற்பத்திப் பொருட்களை அன்றாட உணவுடன் சேர்ப்பதன் மூலம் உடல் நலத்தையும் பேண முடியும்

தமிழீழ மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பயறு, கௌபி, உழுந்து, குரக்கன், சோளம், தினை போன்ற உபதானியங்களையும், மரவள்ளி, வத்தாளை, போன்ற கிழங்கு வகைகளையும், பனை வளத்தினால் பெறப்படும் பனாட்டு, பனம்சீனி, பனைவெல்லம், பனம்பாணி, பதநீர் போன்ற இனிப்புப் பொருள்களையும், கிழங்கில் இருந்து பெறப்படும் ஒடியல் மா, புழுக்கொடியல் மா, போன்ற பனம் பொருள்களையும், தாராளமாக பயன்படுத்தக் கூடிய முறையில் எமது உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் இதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். போதிய அளவு பதனிட்ட உலர் உணர்வை வீட்டிற்கு வீடு சேமித்து வைத்துக் கொள்வதும் அவசியமாகும்.

உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருள்களையும், உள்ளூர் மூலவளங்களையும் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களை எமது நாளாந்த பாவனைக்கு பயன்படுத்தும்போது உற்பத்தி தேவை அதிகரிக்கப்படுகின்றது. அதனால் எமது உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது.எமதுபணம் எமதுமக்களிடமே செல்வதால் பணப் புழக்கத்தில் பாதிப்பு ஏற்படாது. பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது. போர்க்கால சூழ்நிலையில் கூட உணவுத் தட்டுப்பாடு நிலவி மக்கள் பசியால் துயருறும் நிலை அல்லது இறக்கும் நிலை தவிர்க்கப்படுகின்றது. உள்ளூர் வியாபாரிகள் கொள்ளை இலாபம் ஈட்டும் சந்தர்ப்பத்தை இழக்கச் செய்ய முடிகின்றது.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

## வடமராட்சி கிழக்கு அகதிகளுக்கு உடனடி நிவாரணம்

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்துள்ள வடமராட்சி கிழக்குப் பகுதி குடும்பங்களுக்கு பத்தாம் கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, முள்ளியான், வெற்றிலைக்கேணி சுண்டிக்குளம், ஆழியவளை, போக்கறுப்பு ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கே வழங்கப்படுகிறது.

இவர்கள் இடம்பெயர்ந்துள்ள இடங்களில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இந்நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிவாரணம் 1,500 ரூபாக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கு பணத்திற்கே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

50, 43

## உணவுப் பயிர்களைப் பயிரிடுதல் வேண்டும்

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் அதிபர்களும் ஆசிரியர்களும் உணவுற்பத்தியில் மாணவர் வளத்தை உச்சமாகப் பயன்படுத்த உழைக்கவேண்டும். பாடசாலைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் போசாக்கு தரக்கூடிய உணவுப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் உணவுப் பற்றாக்குறைகளையும் போஷாக்கின்மையையும் நீக்க வேண்டும். மேலும் மரநடுகைத் திட்டத்தின் மூலம் சூழலைப் பாதுகாப்பதுடன் எதிர்காலத்தில் பாடசாலைகளில் வகுப்பறைத் தேவைகளுக்கு உதவக் கூடிய மகோகனி, வேம்பு, வாகை, பலா போன்ற பயன்தரும் மரங்களை உற்பத்தி செய்தல் வேண்டும்.

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும்,மாணவர்களையும் கோரியுள்ளார்.

## மின்னல் ஏழுதடவை தாக்கியதால் கின்னஸ் புத்தகத்தில்

அமெரிக்காவைச் சேர்ந்த ''ரோய் சி சுலிவன்'' என்பவரை மின்னல் ஏழுதடவைகள் தாக்கியதால் அவர் பெயரும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

முதன்முறையாக 1942 ஆம் ஆண்டில் சுலிவன் மின்னலால் தாக்கப்பட்டபோது அவர் தனது இடது கால் பெருவிரலை இழந்தார். 1969 ஆம் ஆண்டு யூலையில் இரண்டாவது தடவையாக மின்னல் தாக்கியபோது, கண்புருவங்களையும் வலது கண்பார்வையையும் இழந்தார். 1970 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக மின்னல் இவரைத் தாக்கியபோது இவரது தலைமுடி முற்றாகத் தீய்ந்தது. 16. 4. 1972 இல் நான்காவது முறையாக மின்னல் இவரைத் தாக்கியபோது, இவரின் இடது தோள்பட்டை பொசுங்கியது. 7. 8. 1973 இல் ஐந்தாவது தடவையாக மின்னல இவரைத்தாக்கியபோது இவரின் இடதுகால் முற்றாக பொசுங்கியது.5. 6. 1976 இல் ஆறாவது தடவையாக மின்னல் இவரைத் தாக்கியபோது இவரது இடது கை மணிக்கட்டுவரை பொசுங்கியது 25. 6. 1990 இல் மீண்டும் மின்னல் இவரை ஏழாவது தடவையாக தாக்கியது. இம்முறை இவரது மார்பு, வயிறு ஆகியன எரிந்துவிட்டன.

இவரின் சாதனை ஒருபுறம் இருக்க, ஏழு தடவைகள் மின்னல் இவரைத் தாக்கியும் எப்படி இவர் உயிர் தப்பினார்? எல்லாவற்றிற்கும் மேலாக மின்னலை இவர்பால் ஈர்க்கக் கூடிய சக்தி ஏதாவது இவர் உடலில் இருக்கிறதா என்ற வினாக்களுக்கு விடை காணும் பொருட்டு மருத்துவ விஞ்ஞானிகள் கடந்த சில மாதங்களாய் அணு அணுவாய் சோதனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## மக்கள்வங்கி கிளைகள் செயற்படும்

யாழ் மக்கள் வங்கிக் கிளைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களுக்காக இன்று திங்கட்கிழமை முதல் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிளைகளில் கணக்கு வைத்துள்ள சங்கங்கள், சம்பந்தப்பட்ட வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படியும் பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்.

## பாரதி இல்லம் முதலிடம்

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றபோது பாரதி இல்லம் (பச்சை) அதிக புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றது. வித்தியாலய அதிபர் ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி க. மகேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (16)

## கப்பல் திரும்பியது

முல்லைத்தீவு மாவட்டத்திற்கென 'தைப்போன்' கப்பலில் வந்த உணவுப்பொருள்கள் ஊரடங்குச்சட்டத்தால் இறக்கமுடியாது அக்கப்பல் திரும்பிச்சென்றது.

ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருள் இக்கப்பலில் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முல்லைத் தீவு மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணப்பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் கூறுகின்றன. (38)

தொடர் : 1

## ஆனையிறவு

'அரவிந்தன்'

யாழ்ப்பாணக் குடாநாட்டையும், பெருநிலத்தையும் இணைக்கும் குரல்வளையாக ஆனையிறவு விளங்குகின்றது. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என்ற மூன்று பெருந்தீவுகள் இணைந்து உருவான யாழ்ப்பாணக் குடாநாட்டினை வன்னிப்பிரதேசம் பெருநிலத்துடன் இணைக்கும் நீரிணையாக, ஜலசந்தியாக, ஆனையிறவு அமைந்துள்ளது. மேற்குக் கிழக்காக யாழ்ப்பாணக் கடல் நீரேரி மண்டைதீவின் கிழக்குக் கரையிலிருந்து கிழக்கே நல்ல தண்ணித் தொடுவாய் வரை ஏறத்தாழ 70 கிலோ மீற்றர்கள் வரை, சராசரியாக 6 கிலோமீற்றர்கள் அகலத்தில் பரந்திருக்கின்றது. கூடிய அகலம் பூநகரி நல்லூருக்கும், கிளாலிக்குமிடையிலான 15 கிலோ மீற்றர்களாகும். மிகக் குறைந்த அகலமாக அரை கிலோமீற்றர் அகலங்கொண்ட ஆனையிறவு நீரிணை அமைந்துள்ளது. இந்த அரைக்கிலோ மீற்றர் அகலமான ஆனையிறவு நீரிணை அமைந்துள்ளது. இந்த அரை கிலோமீற்றர் அகலமான ஆனையிறவு இறக்கத்தை மேவி 24 அடிகள் (8 மீற்றர்) அகலமான அணை கட்டப்பட்டு, அதன் மீது பிரதான வீதியும் புகையிரதப்பாதையும் அமைந்துள்ளன. இவ்விரு வீதிகளுமே இவ்விரு நிலங்களையும் இணைக்கும் குறுகிய வழியாகும்.

ஆனையிறவிலிருந்து சுற்றிவர நோக்கில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில், மழைக்காலமாயின் கடல்நீர், கிழக்கு தெற்குப் பகுதிகளில் பரந்து நிற்கும். வடபகுதியில் ஒடுங்கிய ஓடையாகக் கடல் நீர் தேங்கி நிற்க அதற்கு அப்பால் புல்லா வெளி— இயக்கச்சிப் பற்றைக்காடுகள் கவிந்து கிடக்கும். மேற்குப்பக்கத்தில் புதர்கள், உவர் நிலமிபரவல் காணப்படும். ஆனையிறவிலிருந்து கிழக்குப்பக்கமாக, கடல்நீரேரியூடாகச் சுண்டிக்குளத்தை அடையவேண்டுமாயின் ஏறத்தாழ 20 கிலோ மீற்றர்கள் செல்ல வேண்டும். கட்டைக்காட்டுக் கடற்கரையை அடைய வேண்டுமாயின் 10 கிலோ மீற்றர்கள் மணல் வெளி, பற்றைக்காடுகள் ஊடாகச் செல்லவேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையோரம் பருத்தித்துறையிலிருந்து நல்லதண்ணித் தொடுவாய் வரையில் பரந்து கிடக்கின்றது. கடற்கரை ஒரே மணல்வெளியாகும்.

நாகர் கோயில், குடாரப்பு, தாளையடி, செம்பியன் பற்று, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் எனக் கிராமங்கள் இக் கடற்கரையில் பரந்து சிதறிக்கிடக்கின்றன. வறண்ட மணல்வெளியும், பற்றைக்காடுகளும், புதர்களும் நிறைந்த நிலக்காட்சி விரியும். வறட்சிப் பருவத்தில் மணல்வெளி பரந்து கிடக்கும். கடல் நீரேரிகள் வற்றிப் புழுதிபறக்கும். சோளகக்காற்றுக் காலமாயின் மணற்புயல் வீசுவது போல புழுதி பறக்கும். மழைக்காலத்தில் புதர்களும், பற்றைகளும் நிறைந்த திடர்கள் கடல் நீராலும் வெள்ளநீராலும் சூழப்பப்பட்டு ஆங்காங்கு தனித் தனித் தீவுகளாகத் தெரியும்.

ஆனையிறவுக்கு நேர் வடக்கே, மழைக் காலத்தில் சிறு கடலாகி, வரட்சிக் காலத்தில் பாலைவெளியாக மணல் பறக்கும் பகுதியூடாகச் சென்று, பற்றைக் காடுகளூடாகச் செல்லின் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் இயக்கச்சிச் சந்தியை அடையலாம். ஆனையிறவிலிருந்து தென்கிழக்காக ஏறத்தாழ 20 கிலோமீற்றர் தூரத்தில் சுண்டிக்குளம் அமைந்துள்ளது. வெற்றிலைக்கேணிக் கிராமம் ஆனையிறவில் இருந்து கிட்டத்தட்ட 9 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது. மணல் வெளியூடாகவும், புதர்கள் செறிந்த திடல்களூடாகவும், பனைகளும், வடலிகளும் பரந்த சிறு குடியிருப்புகளூடாகவும் செல்லின், வளைந்து வளைந்து மியாந்தராகக் கிடக்கும் போர்க்கால வியாபாரிகள் அமைத்த பாதைகளூடாகச் செல்லின் மேற் கூறிய இடைத் தூரங்கள் மேலும் நீளுமே தவிர சுருங்காது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒதுக்கப்பட்ட ஒரு நிலக்கீற்றாக, வடமராட்சிக் கடனீரேரிக்குக் கிழக்கே, நாகர் கோவிலில் இருந்து சுண்டிக்குளம் வரை நீண்டு கிடக்கும் பரப்பில் பல நூற்றாண்டுகளாக எதுவித பெருமாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. இந்து சமுத்திரத்தின் அலைத் தழுவலால் கரையோரங்களில் குவிக்கப்படும் மணல் தரைசார் நிலமாக வளர்ந்து கிடக்கின்றது.

ஆனையிறவைச் சூழ்ந்த நிலப்பரப்பு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, ஹாடி (Hardy) என்ற ஆங்கிலேயன் 1841 இல், பச்சிலைப்பள்ளியில் புகையிலை பயிரிடவெனக் காட்டு நிலத்தை ஆங்கிலேய அரசிடமிருந்து வாங்கும் வரை, யானைகளும், மான்களும், பன்றிகளும் ஏனைய காட்டு விலங்குகளும் சுதந்திரமாக வாழும்காடு அடர்ந்தபிரதேசமாக விளங்கியது. ஆனையிறவுக்குத் தெற்கே கரைச்சிப் பிரதேசம் முழுவதும் அடர்ந்த காடு செறிந்த பகுதியாக இருந்தது. வடக்கே செம்பியன்பற்று,சேரன்பற்று,ஊர்வணிகன்பற்று,கோயில்பற்று முதலான சிறுசிறு காட்டுக் கிராமங்கள் ஆங்காங்கு சிதறிப் பரவிக் கிடந்தன. பச்சிலைப்பள்ளியும் கரைச்சிப் பிரதேசமும் காடுகள், புதர்கள், மணல் வெளிகள், வேற்று நிலங்கள், குளம் குட்டைகள், கடல் நீரேரிகள் கொண்ட இயற்கை நிலமாக, ஐந்து பத்துக் குடும்பங்களைக் கொண்ட காட்டுக் கிராமங்களை ஆங்காங்கு கொண்டனவாக விளங்கின.

மிகப்பண்டை நாளில் இருந்தே ஆனையிறவு, யாழ்ப்பாணப்பட்டினம் எனப்பட்ட யாழ்ப்பாண அரசையும், வன்னிச் சிற்றரசுகளையும் இணைக்கும் பிரதான பாதைகளில் ஒன்றாக விளங்கி வந்துள்ளது. பெரு நிலப்பரப்பில் வன்னிச் சிற்றரசுகள் பல விளங்கின. பனங்காமம், பரந்தன் வெளி, மேற்பற்று முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, கரைச்சி, கருநாவற்பற்று, புதுக்குடியிருப்பு, தென்னமரவாடி என்பன குறிப்பிடத்தக்க வன்னிமைகளாகும். இந்த வன்னிப் பிரதேசங்களை ஆட்சிசெய்த வன்னியச் சிற்றரசர்கள், யாழ்ப்பாணத் தமிழரசருக்கு அடங்கியவர்களாகவும், திறை செலுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். வலிகாமம், வடமராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற பிரிவுகளுடன் வன்னிநாட்டையும் யாழ்ப்பாண அரசு உள்ளடக்கியிருந்தது. இந்த அரசு மன்னாரிலிருந்து திருகோணமலை வரை பரந்திருந்தது. (வளரும்)

...சியப்படைகுறித்த நூல்கள் பறிமுதல்

# எழுத்தாளர் சிவநாயகம் தமிழகத்தில் கைது

இந்திய அமைதிப்படை இலங்கையில் புரிந்த அட்டூழியங்களை எடுத்துக்காட்டும் புத்தகத்தின் 7,500 பிரதிகளைத் தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனராம்.

இப் புத்தகப்பிரதிகள் பைண்ட் செய்வதற்காகவே வைக்கப்பட்டிருந்த போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனிடையே லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் நாடு' எனும் சஞ்சிகையின் ஆசிரியர் சிவநாயகம் சென்னையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் மற்றுமோர் இலங்கையரான குகதாஸனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்களிடம் தகுந்த கடவுச்சீட்டு எதுவும் இருக்கவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# சண்முகத்தின் சடலம் அறிக்கையின்றி ஒப்படைப்பு

நேற்று முன்தினம் மர்மமான முறையில் வேதாரணியம் காட்டுப்பகுதியில் தூக்கில் தொங்கிய சண்முகத்தின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

இவரின் மரணம் குறித்து வைத்திய அறிக்கை தயாரான போதிலும் அது பகிரங்கப்படுத்தாமலேயே சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அவர் தாமாகத் தூங்கினாரா அல்லது கொல்லப்பட்ட பின்னர் தூக்கப்பட்டாரா என்பதையறிய மரணவிசாரணை நடாத்தப்பட்டு வைத்திய அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என சி. பி. ஐ அறிவித்திருந்தமை தெரிந்ததே.

சண்முகம் ராஜீவ் கொலையில் முக்கிய சந்தேக நபராக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் இராணுவத்தரம் ஸ்ரீலங்காவும் குறிப்பிடுகிறது!

விடுதலைப்புலிகளை ஸ்ரீலங்கா அரசு எதிர்த்தரப்பு இராணுவமாகவே கருதுவதாகத் தெரியவருகிறது.

வானொலிச் செய்திகளிலும் தற்போது புலிகளின் இராணுவ மூக்கியஸ்தர்களை மேஜர், லெப். கேணல் போன்ற இராணுவப்பதங்களுடனேயே அறிவிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

# மாவீரர்களுக்கு புத்தூரில் அஞ்சலி

கட்டைக்காட்டில் படையினருக்கு எதிரான மோதலில் நேற்று முன்தினம் ஐந்து போராளிகள் களப்பலியாகியுள்ளனர்.

இம் மாவீரர்களது புகழுடல்கள் நேற்று மக்களின் இறுதி அஞ்சலிக்காகப்புத்தூர் மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டது. அர்யுன் (சி நந்தகோபால் - திருமலை), வியே (செ. சிற்றம்பலம் - மட்டக்களப்பு), விலித் (வே விஜயகுமார் - திருமலை), கொலின் (ச. காந்தி - மயிலிட்டி), நேரு (சா. குமரேசன் - புத்தூர் மேற்கு), சோபிகா (பராசக்தி கந்தசாமி - ஏழாலைமேற்கு).

தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது. இதன்பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் மாவீரரின் புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகின. 79

## படையினர் ஷெல் தாக்கு

காரைநகர் வலந்தலையிலுள்ள இராணுவ முகாமிலிருந்து நேற்று இரவு ஷெல் தாக்குதல் பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. 13

### மணலாறு...

சிப்பாய்கள் காயமடைந்தனர். படையினரிடமிருந்து ரி - 50 துப்பாக்கி, 40 எம்.எம்.ஷெல் மூன்று, ஆர். பி. ஜி ஷெல்-2 என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

மாலையில்மீண்டும் மோதல்கள் ஏற்பட்டபோதிலும் படையினர் பின்வாங்கிமுகாம் திரும்பினர்.

மோதலின்போது கொல்லப்பட்ட, காயமடைந்த படையினரை மீட்க ஹெலிக்கப்டர் ஒன்று அப்பகுதியில் தரையிறங்க முற்பட்டது. ஹெலி மீது புலிகள் கடும் தாக்குதலை நடாத்தவே அது தன் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றது.

இம்மோதல்களின் போது புலிகள் தரப்பில் 4போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். கப்டன் நியூட்டன் (மன்னார்), லெப. பிரதாப் (மட்டக்களப்பு), 2ஆம் லெப். செல்வம் (மன்னார்), நிதி (மட்டக்களப்பு)

### படையினரின்...

ஆறுமாத காலமாக புலிகள் இம் முகாமை திட்டமிட்டுத் தாக்கி வந்திருக்கின்றனர். இப்போது முகாமையே முற்று கைக்குள்ளாக்கி விட்டனர் புலிகள் என நேற்றைய சண்டேரைம்ஸ் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

### வாகனங்கள்...

எல். சி-23 படகு மூன்று கடற்படை கப்பலின் பாதுகாப்புடன் காங்கேசன்துறைப் பகுதியைநோக்கிச்சென்றதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். 38

### கட்டைக்காடு...

1 உம், ரி-56-2ரகத்துப்பாக்கி -1உம், இரண்டு படையினரின் சடலங்களும் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இதேபோல நேற்றுக்காலை 9மணியளவில் மீண்டும் கட்டைக்காட்டில் இருந்து நகர முயன்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் தொடுத்ததில் படையினர் ஒருவரின் சடலமும் இவரது ரி.81 ரகத் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது.

இச்சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (ப. 11)

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொல்கிறார்:

# இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நீக்கினால் நாட்டுக்கு ஆபத்தாம்!

1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நீக்கிவிடக் கூடாது. இவ்வாறு எச்சரித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நீக்கினால் அது முழு நாட்டுக்கும் ஆபத்தாக முடிந்துவிடலாம். இதை விடுதலைப்புலிகளும் வாய்ப்பாகக்கொண்டுபல கோரிக்கைகளை முன்வைக்கலாம். அதை அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாததாகி விடும்.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய குழுவினர் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர் எனவும் ஜெயவர்த்தனா மேலும் தெரிவித்தார்.

# நாகர்கோயில் குண்டு வீச்சு 23 வீடுகள் சேதம்

நாகர்கோயில் பகுதியில் நடந்த குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் நான்கு வீடுகள் தரைமட்டமானதையடுத்து இருபத்து மூன்று வீடுகள் சேதமடைந்தன.

நாகர்கோயில் கிழக்கில் வீசிய குண்டுக்கு உ ஜெயதேவன், ப. துரைஐயா, மு. உதயகுமார், இ. குணரட்ணம் ஆகியோரது வீடுகளே தரைமட்டமாகின, இட பகுதியில் மேலும் பத்தொன்பது வீடுகளும் நாகர்கோயில் மேற்கில் நான்கு வீடுகளும் சேதமடைந்துள்ளன. (38)

# மீனவர் தடை நீங்கியது

தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு இருந்த கட்டுப்பாட்டை நீக்குவதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

எனினும் மீனவர்கள் பத்துப்படகுகள் கொண்ட தனித்தனியான குழுவாக கடலுக்குச் செல்லவேண்டும் எனவும், இவற்றில் ஒரு படகில் வயர்லெஸ் பொருத்தப்பட்டு இந்திய கடலோரக் கண்காணிப்புப் படையினருடன் எந்நேரமும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் எனவும் மீனவர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு மீனவர் கடலுக்குச் செல்ல விதித்த கெடுபிடியினால் மீனவர் மத்தியில் எழுந்த கொந்தளிப்பை அடுத்தே அரசு இத்தடையை நீக்க முன்வந்துள்ளது.

# தந்தையின் வழி மகன் வடபகுதியில் பலி

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப்பகுதியில்கடந்த வாரம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது லெப்ரினன்ட் சமன்கமலத் - ஹொறவப் பொத்தானை விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்,

இவ்வாறு இறந்த சமன் குமாரகம்லத் 3 ஆம் கஜபாகு சிங்க ரெஜிமன்ட் படைப்பிரிவின் முக்கியஸ்தர் எனக் கூறப்படுகிறது.

இவரது தகப்பனாரும் வட இழக்குபபகுதியில் இராணுவ அதிகாரியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 74

### பரந்தனிலும்...

தனர்.

இரவு வேளையில் குமரபுரம் பகுதியை வட்டமிடும் குண்டு வீச்சு விமானங்கள் வெளிச்சம் தெரியும் வீடுகளின் மேல் குண்டுகளை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையினால் பீதியடைந்த அப்பகுதி மக்கள் துணுக்காய், மல்லாவி மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (38)

### கட்டைக்காட்டுப்பகுதி...

சேர்ந்த வீ. நாகம்மா (61) த. சின்னராசா (21), த. வசந்தகுமார் (24), இராசேந்திரத்தின் மனைவியும் இவர்களது ஆறுபிள்ளைகள், சின்னத்தம்பி, குட்டியம்மாள் ஆகியோரே காணாமற் போனவர்கள்எனக் கருதப்படுகின்றனர்.

இதேவேளை படையினரிடம் அகப்பட்ட வயோதிபர் ஒருவர் தப்பிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது, 18

### ஊரையோர...

முடியாதவகையில்அக்கிராம, பகுதியில் உள்ள கடைகள் கட்டிடங்கள்,வீடுகள் அனைத்தையும் இராணுவம் தரைமட்டமாக்கி வருகிறது. 38

### பிரிந்த...

தமது மனைவி,பிள்ளைகளது தகவல்களை அறிந்துகொள்ள முடியாதிருப்பதாகவும் இவர்கள் எங்கு இருக்கிறார்கள் இவர்களுக்கு என்ன நேர்ந்தது என தெரியாதிருப்பதாகவும் கண்ணீர் சிந்திய நிலையில் நிருபருக்குத் தெரிவித்தனர். (38)

### இரு சிரேஷ்ட...

இராணுவப் பிரிவுகளுக்கு தலைமை தாங்குகின்றனர்.

மேற்படி 5 இராணுவப் பிரிவுகளும் கிழக்கு மாகாணத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும் இவர்களது இடத்துக்கு அங்கு அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மரண அறிவித்தல்களில் படையினர் பட்டியல்

தற்போது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையில் மரணமடையும் இராணுவத்தினரின் மரண அறிவித்தல்கள் இலங்கை வானொலி ஆங்கில மற்றும் சிங்கள சேவையில் தினமும் இடம்பெறுகின்றன.

நேற்று மட்டும் ஒருமேஜர், இரண்டு கப்டன் உட்பட ஐந்து படையினரின் பெயர்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன இதன் விவரம் வருமாறு: மேஜர் உபாலி அபயசிறிவர்த்தன-மாத்தறை கப்டன் துகிதர இந்திரஜித்-நுகேகொட, கப்டன் டிவால் பிரசந்த கெம்புயராட்சி- வத்தளை, கோப்ரல் டம்மிய ஜெயவர்த்தனா, கோப்ரல் விஜயலாய் ஆகியோரது விவரங்கள் ஒலிபரப்பப்பட்டன. இவர்கள் சிங்க ரெஜிமன்டைச் சேர்ந்தவர்கள். 74

### முன்னேறி...

பின்னால் ஒரு குழுவாகவும் தொடர்பின்றி துண்டிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் பின்னால் உள்ள குழுவை வழிமறித்துத்தாக்குதல் நடாத்த, புலிகளின் மற்றைய அணி முன்னால் சிக்கிக்கொண்ட இராணுவ அணியை முற்றாகவே சுற்றிவளைத்துக் கொண்டனர்.

முற்றாகப்புலிகளால்சுற்றிவளைக்கப்பட்டுள்ள இராணுவ அணியுள் சுமார் 100 சிப்பாய்கள் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர். இவ்வணியில் இருந்த படையினரின் கவச வாகனம் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இரவு வரை எரிந்து கொண்டிருந்தது

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை சுற்றிவளைக்கப்பட்ட இராணுவ அணி மீது புலிகள் தாக்குதலை நடாத்திக் கொண்டனர்.

## காலமானார்

### திருமதி சிங்கராயர் மேரியோசேப்பின் (நேசம்மா)

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிங்கராயர் மேரி யோசேப்பின் (நேசம்மா) (இளைப்பாறிய மருத்துவமாது, யாழ். வைத்தியசாலை) 21-07-91 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சிங்கராயரின் அன்பு மனைவியும், திருமதி நவமணி சேவியர், திரு. நவரட்ணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற திருமதி குணமணி அன்னராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. பிரான்சிஸ் சேவியர் திருமதி லூட்ஸ் நவரட்ணம் (ஜேர்மனி), திரு. அன்னராஜா (ஸ்ரீலங்கா மில்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி றஞ்சினி குபேரன், திரு. குபேர குலேந்திரன் (வர்த்தகவங்கி-யாழ்),திரு. கிறிஸ்ரி றஞ்சன் (செய்தி ஆசிரியர், முரசொலி), அன்ரன் (யாழ். பல்கலைக் கழகம்), காயத்திரி. காமினி, யோறரீத் குமார் ஆகியோரின் பேத்தியாரும், பிறவீன், பிறிந்தினி ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 22-07-91 அன்று மாலை 3-30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

மிருசுவில். குடும்பத்தினர்

07097

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 22.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.